**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.44/2025**

**தேதி : 04.03.2026**

**(வா.சா.1) – திரு. M. துரைச்சாமி**

**சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை :– (1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில்)**

1. நான் டிப்ளமோ எலெக்ட்ரிக்கல் படித்துள்ளேன். தமிழ்நாடு மின்சார வாரியத்தில் உதவி செயற்பொறியாளராக பணிபுரிந்து 2003ல் ஓய்வு பெற்றுள்ளேன். என் தகப்பனார் அரசு ஆசிரியராக பணிபுரிந்தார். என் தகப்பனார் அவருடைய வருமானத்தை வைத்து என்னை பொள்ளாச்சி நாச்சிமுத்து பாலிடெக்னிக் கல்லூரியிலும், என் சகோதரியான 4ம் பிரதிவாதியை ஈரோடில் உள்ள ஆசிரியர் பயிற்சி பள்ளியிலும் படிக்க வைத்தார் என்றால் சரிதான். என்னையும், 4ம் பிரதிவாதியையும் நல்ல முறையில் படிக்க வைத்ததால் என் தகப்பனாரால் 1ம் பிரதிவாதியை நல்லமுறையில் படிக்க வைக்க இயலவில்லை என்றால் சரியல்ல.

2. என் தம்பியான 1ம் பிரதிவாதி 10ம் வகுப்பு வரை மட்டுமே படித்தார் என்றால் அவர் அதற்குமேல் படிக்க மறுத்துவிட்டார். நான் வெளியூரில் தங்கி வேலை பார்த்து வந்ததால் என் பெற்றோரை என்னுடன் வைத்து பராமரிக்கவில்லை என்றால் வெளியூரில் உடன் வைத்துக்கொள்ளாவிட்டாலும் அவர்களை எங்கள் சொந்த வீட்டில் வைத்து நான் பராமரித்தேன். என் பெற்றோரை என் தம்பி தங்கவேல்தான் பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல, நான்தான் பராமரித்து வந்தேன். நான் ஓய்வு பெற்ற பின்னர் நான் என் தாய், தந்தையுடன் இருக்காமல் திண்டுக்கல்லில் செட்டிலாகவிட்டதாகச் சொன்னால் திண்டுக்கல்லில் இருந்தாலும் அடிக்கடி வந்து என் தாயாரை பார்த்துச்சென்றேன்.

3. என் தகப்பனார் சின்னக்கலையம்புத்தூரிலும், என் தாயார் குறும்பபட்டியிலும் இறந்தார்கள் என்றால் சரிதான். முழுமையாகப் படித்துப் பார்த்துத்தான் நான் நிரூபண வாக்குமூலத்தில் கையொப்பம் செய்தேன். 1 முதல் 3 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை நான் படித்துப் பார்த்துள்ளேன். அந்த எதிர்வாதத்தில் கண்டுள்ள விசயங்களை மறுத்து பதிலுரை தாக்கல்

செய்துள்ளேனா என்றால் பதிலுரை தாக்கல் செய்யவில்லை, என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் மறுப்பு தெரிவித்துள்ளேன்.

4. தாவா 1வது அயிட்டச் சொத்தை எனது தாயார் வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் 2000ம் வருடத்தில் ரூ.96,000/–க்கு கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல, என் தகப்பனார் வாங்கியிருந்த சொத்தை விற்று வந்த தொகையை வைத்து என் தாயார் பெயருக்கு கிரையம் வாங்கப்பட்டது. என் தகப்பனார் விற்ற கிரையப் பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் தாயார் கிரையம் வாங்கியபோது நான் வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேனா என்றால் இல்லை. தற்போது வரை நானும், என் சகோதரியான 4ம் பிரதிவாதியும் ஒற்றுமையாகத்தான் உள்ளோம் என்றால் சரிதான்.

5. தாவாச்சொத்துக்களில் பாகம் கேட்டு யாரிடம் பைசல் வைத்தேன் என்றால் பைசல் வைத்ததாக நான் சொல்லவே இல்லை. 3ம் பிரதிவாதி சுந்தரம் என்பவர் குத்தகைதாரர் என கூறுவதற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை, விசாரித்ததில் தெரியவந்தது. 3ம் பிரதிவாதி சுந்தரம் 1ம் பிரதிவாதியின் வேலையாள் என்றும், அவர் தற்போது 1ம் பிரதிவாதியிடம் வேலை செய்யவில்லை என்றும் சொன்னால் அவர் தற்போதும் 1ம் பிரதிவாதியிடம் வேலை செய்து வருகிறார். 1 முதல் 3 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள விற்பனை இல்லாத பொது அதிகார ஆவணத்தில் இருப்பது என்னுடைய கையொப்பம் அல்ல என்று நிரூபிக்க கையெழுத்து நிபுனருக்கு அறிக்கை பெற மனு செய்துள்ளேனா என்றால் இல்லை, ஆனால் அதில் இருப்பது என்னுடைய கையொப்பம் அல்ல.

6. தாவா 1வது அயிட்டச்சொத்தான விவசாய நிலத்தில் விவசாய செலவுகள் ஏதாவது நான் செய்தேனா என்றால் இல்லை. 1வது அயிட்ட விவசாய நிலத்தில் நான் இன்றுவரை சுவாதீனத்தில் இல்லை என்றால், நான் சுவாதீனத்தில் இருந்து விவசாயம் செய்யவில்லை, ஆனால் அவ்வப்போது சென்று பார்த்து வருகிறேன். 1வது அயிட்ட விவசாய நிலத்தை சமன் செய்து குளத்து வண்டல் மண் போட்டு, பைப் லைனும் அமைத்த செலவில் ஏதாவது நான் செய்தேனா என்றால் அவ்வாறான வேலை எதுவும் மேற்படி நிலத்தில் நடக்கவில்லை. எனது தகப்பனார் ஓய்வு பெற்ற அரசு ஆசிரியர் என்பதால் நாங்கள் வசதியான குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்றால் அப்படியில்லை.

7. தாவா 2,3,4 அயிட்டச்சொத்துக்களில் ஐந்து குடியிருப்புகள் உள்ளதா என்றால் உள்ளது. அதில் வாடகைதாரிகள் குடியிருக்கிறார்களா என்றால் குடியிருந்து வருகிறார்கள். என் தம்பிதான் அதனை வாடகைக்கு விட்டுள்ளார். அதில் யார் யார் குடியிருந்து வருகிறார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஐந்து குடியிருப்பு வாசிகளையும் நான் தான் குடியிருக்க வைத்துள்ளேன் என்றும், நான்தான் வாடகையை வாங்கி வருகிறேன் என்றும், அதனை மறைத்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

8. வாடகைதாரிகளை நான் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காததால் இந்த வழக்கு தேவையான கட்சிக்காரர்களை சேர்க்காத தோசத்திற்கு உள்ளதாகிறது என்று சொன்னால் சரியல்ல. பழனி வட்டத்தில் குறும்பபட்டியில் உள்ள நல்லுசாமிதேவர் மகன் கருப்புச்சாமியும், பெருமாள் தேவர் மனைவி அய்யம்மாள் ஆகியோர் என் உறவினர்களா என்றால் ஆம். எங்கள் குடும்பத்தில் நடக்கும் நல்லது கெட்டது என் தாயாரின் இறப்பு போன்ற காரியங்களுக்கு அவர்கள் வந்துள்ளார்களா என்றால் இல்லை. எங்கள் குடும்பத்திற்குப் பாத்தியப்பட்ட அசையாச் சொத்துக்களை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அவ்வாறான சொத்துக்கள் எதுவும் இல்லததால் சேர்க்கவில்லை.

9. என் தாயாரிடம் 40 பவுன் தங்க நகையும், ரூ.2,00,000/– ரொக்கமும் இருந்தது என்றும், அதனை வழக்கில் சேர்க்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் தாயாரின் பென்சன் பணத்தை ஒவ்வொரு முறையும் நான்தான் எடுத்துள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறான பணத்தில் என் தாயாருக்கு மருந்து செலவுகள் ஏற்பட்டதுபோக மீதப்பணத்தை என் தாயாரிடம் கொடுத்துவிட்டு வந்துவிடுவேன். என் தாயாருக்கு ஏற்பட்ட மருத்துவச் செலவுகளுக்கு ஆதாரங்கள் உள்ளதா என்றால் இல்லை. என் தாயார் நல்ல ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும்தான் இருந்தார் என்றும், அவரை துன்புறுத்தி நான் அவரது பென்சன் பணத்தை பெற்று வந்ததேன் என்றும், பென்சன் பணத்தில் மருந்து மாத்திரைகள் வாங்கியதாகச் சொல்வது பொய் என்றும் சொன்னால் சரியல்ல.

10. என் தாயாரின் பென்சன் பணத்தில் என் சகோதரிக்கு ஒவ்வொரு மாதமும் ஒரு தொகையை கொடுத்து வந்ததாகச் சொன்னால் சரியல்ல, பென்சன் பணத்தை என் தாயார் வசம் மட்டுமே கொடுத்து வந்தேன். தாவா 1வது அயிட்டச்

**சொத்து பிரிக்கமுடியாத நிலையில் இருப்பதாகச் சொன்னால் சரியல்ல, பிரிக்க முடியும். 4ம் பிரதிவாதியும், நானும் கூட்டுச் சேர்ந்துகொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.**

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)**

Taken down by me in open court and
read over to the witness in Tamil and
acknowledged by him/her to be correct.

K. BHARATHI
Digitally signed by K. BHARATHI
Date: 2026.03.04 17:09:50 +0530

Additional Sub Judge,
Palani.